பக்கங்கள்:-14

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 21 | திங்கட்கிழமை | 07.10.2024 | அதிர்வு 066

## சார்ள்ஸ் இம்முறை போட்டியிட விண்ணப்பிக்கவில்லையாம்

### இப்படி சுமந்திரன் கூறுகின்றார்



(கி.வசந்தன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற

06




### வேட்பாளர் பட்டியலில் இடம் கிடைக்காமையால்

# தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறினார் தவராசா

### கட்சியைச் சுமந்திரன் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்கின்றார் என்றும் அவர் சீற்றம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பதவி மற்றும் பொறுப்புக்களில் இருந்தும் தான் விலகுகின்றார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார்.

இதன்படி, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவர் பதவி, தமிழரசுக்கட்சியின் சட்டக்குழு தலைவர், மத்திய குழு உறுப்பினர் ஆகிய அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் தான் விலகுகின்றார் என்று அவர் அறிவித்துள்ளார்.

06

## சுமந்திரனுடனான ஊடகச் சந்திப்பை புறக்கணித்து வெளியேறிய சிறீதரன்



(கி.வசந்தன்)

வவுனியாவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான ஊடக சந்திப்பைப் புறக்கணித்து முன்னாள் நடாளுமன்ற உறுப்பினர்

06




இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு இது போறாத காலம்தான் போலும்.

வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் யாழ் மாவட்ட வேட்பாளர்களின்பட்டியலைஅக்கட்சி வெளியிட்டதை அடுத்து கட்சிக்குள் பெரும் பிரளயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

வேட்பு மனு மறுக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி கேவி.தவராஜா கடந்த 14 ஆண்டுகளாக தாம் தலைமை வகித்து வந்த கொழும்பு கிளையின் தலைவர் பதவியில் இருந்தும் கட்சி உறுப்புரிமையிலிருந்தும் வெளியேறுகிறார் என அறிவித்திருக்கிறார்.

கட்சி வேட்பாளர்களின் தெரிவு பற்றிய அறிவிப்பு மேலும் பல குழப்பங்களைக் கொண்டு வரும் என்பது கண்கூடு.

ஏற்கனவே கட்சியின்

06















# நாட்டை முன்னிலைப்படுத்திச் செயற்படுவதே தமது கொள்கை என்கிறார் சஜித் பிரேமதாஸ

நாட்டை முன்னிலைப்படுத்திச் செயற்படுவதே தமது கொள்கையாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி செயற்பாட்டாளர்களுடன் கடுவலை பகுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வைத்தே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் அவர் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தாலும், பின்னடைவு ஏற்பட்டாலும், அதிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு முன்னேற வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் நாடு முன்னேற வேண்டும் ஆகவே நாட்டின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

தற்போதைய கடனை மீள செலுத்த முடியாத நிலையிலே இருக்கிறோம். நாட்டைக் கட்டியெழுப்பும் விடயத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

இளைஞர்கள், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும்.” – என்றார்.









# முன்னாள் ஜனாதிபதி ரணிலின் பாதுகாப்பு நீக்கப்படவில்லை



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என பதில் பொலிஸ் மா அதிபர், சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு கடமையில் தற்போதும் 163 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இவர்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 50 உத்தியோகத்தர்களும் பிரமுகர்கள் பாதுகாப்பு பிரிவின் 6 உத்தியோகத்தர்களும் இடமாற்றம் வழங்கப்பட்ட சில உத்தியோகத்தர்களும் அடங்குகின்றனர் என பதில் பொலிஸ் மாஅதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஈ.பி.டி.பியின் வன்னி மாவட்ட வேட்பாளர் விபரம் வெளியீடு



(கி.வசந்தன்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) வன்னி மாவட்ட வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில், வன்னி தேர்தல் மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருடன் வவுனியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி கிறிஸ்தோபர் டினேஸ் றொசின்ரன், மதுர பிரபோத் ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன், வன்னித் தேர்தல் மாவட்டத்தின் முல்லைத்தீவைப் பிரதிநிதித்துவப்படுத்தி அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ், வின்சன் டிபோல் அருள்நாதன், சின்னத்துரை கலாநிதி ஆகியோரும், மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஞானப்பிரகாசம் மரியசீலன், முருகேசு கதிர்காமநாதன், இந்திரகுமாரன் செல்வம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# தேங்காய் விலை மேலும் அதிகரிப்பு



சந்தையில் தேங்காய் விலை மேலும் அதிகரித்துள்ளது.

சில பகுதிகளில் தேங்காய் ஒன்று 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

கடந்தகாலங்களில்தேங்காய்ஒன்று90ரூபாமுதல்100ரூபாவுக்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்பட்டது.






# ஆடை விற்பனை நிலையத்திற்கு தீ வைப்பு; கைது செய்யப்பட்ட நபருக்கு விளக்கமறியல்



யாழ்ப்பாணம் - நெல்லியடியில் ஆடை விற்பனை நிலையமொன்றுக்கு தீ வைக்கப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இளைஞர் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

காங்கேசன்துறை குற்றத்தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டதுடன், மேற்படி சந்தேகநபர் 24 வயதுடைய சுன்னாகம் பகுதியை சேர்ந்த இளைஞர் என்பதை நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடமிருந்து வாள் மற்றும் பெட்ரோல் குண்டு ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை மோட்டார் சைக்கிளில் வருகைதந்த மூவரால் மேற்படி ஆடை விற்பனை நிலையத்திற்கு தீ வைக்கப்பட்டதுடன், இருவருக்கிடையில் இடம்பெற்ற தனிப்பட்ட தகராறே இந்த சம்பவத்திற்கான காரணமென தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொழும்பு - லண்டன் இடையிலான விமான சேவைகளில் பயண மாற்றம்




கொழும்பு மற்றும் லண்டன் நகரங்களுக்கிடையிலான விமான சேவைகளில் பயண மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் நிலைமை அதிகரித்துச் செல்வதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை லண்டன் நோக்கிச்சென்ற விமானங்கள் ஈராக் வான்மார்க்கத்தினூடாகவே பயணித்தன.

எனினும், இஸ்ரேலினால் ஈரான் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுவரும் நிலையில், பயணிகள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பு கருதி பயண மார்க்கத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான சேவை அறிவித்துள்ளது.

இதற்கமைவாக லண்டன் நோக்கி பயணிக்கும் விமானங்கள் தற்போது எகிப்து வான்மார்க்கத்தின் ஊடாக பயணிக்கவுள்ளன.

இதனால் 30 நிமிட தாமதத்துடன் விமான நேரம் நீடிக்குமென ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நாட்டில் 1500 பேருக்கு 1690 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன: பாதுகாப்பு அமைச்சு



நாட்டில் 1500 பேருக்கு 1690 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை எதிர்வரும் நவம்பர் 07ஆம் திகதிக்கு முன்னர் கடற்படையின் வெலிசறையிலுள்ள அரச வணிக வெடிபொருள்கள் களஞ்சியசாலையில் ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை ஒப்படைத்ததன் பின்னர் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டின் பிரதியை பாதுகாப்பு அமைச்சின் பிரதான நுழைவாயிலுக்கு அருகே ஸ்தாபிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பிரிவின் ஆவணங்களை பொறுப்பேற்கும் கருமபீடத்தில் ஒப்படைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி தினத்திற்குள் துப்பாக்கிகளை மீளக் கையளிக்கத் தவறினால் துப்பாக்கிகள் கட்டளை சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நேரிடும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி வேட்பாளர்களில் 34 பேர் இதுவரை பிரசார செலவு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை




இம்முறை ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கிய 38 வேட்பாளர்களில் 34 பேர் இதுவரை பிரசார செலவுகள் தொடர்பான அறிக்கையை வழங்கவில்லை என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதுவரையில் 04 வேட்பாளர்கள் மாத்திரமே பிரசார செலவு தொடர்பான அறிக்கையை சமர்பித்துள்ளனர் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் முன்னாள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, இலங்கை சோசலிசக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த தேவகே, சுயேட்சை ஜனாதிபதி வேட்பாளர்களான பிரேமசிறி மானகே மற்றும் கே.ஆனந்த குலரத்ன ஆகியோர் மாத்திரமே தேர்தல் பிரச்சார செலவுகள் தொடர்பான அறிக்கையை சமர்பித்துள்ளனர் என ஆணைக்குழு கூறியுள்ளது.

தேர்தல் செலவுகள் வரையறை சட்டத்தின் கீழ் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அந்த திகதிக்கு முன்னர் அறிக்கையை சமர்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

13 ஆம் திகதிக்கு பின்னர் அறிக்கை சமர்பிக்கப்படுமாக இருந்தால் அதனை சட்டவிரோத நடவடிக்கையாக கருதி அவர்களுக்கு எதிராக தண்டனை பெற்றுக் கொடுக்கப்படுமெனவும் ஆணைக்குழு கூறியுள்ளது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மத்திய குழுவும் அதன் தெரிவாகிய வேட்பாளர் தேர்வுக் குழுவும் சுமந்திரனின் ஆதரவு பிடியில் இருப்பதாகக் கோடி காட்டி இருந்தேன்.

நேற்று மாலை யாழ் மாவட்ட வேட்பாளர் தெரிவு அறிவிக்கப்பட்ட பின்னர் சமூக ஊடகம் ஒன்றில் வந்த ஒரு குறிப்பு என் முன்னைய கருத்தை நிரூபிக்க போதுமானது போன்று தோன்றியது.

யாழ் மாவட்ட வேட்பாளர் பட்டியலில் சிறிதரன் தவிர ஏனையோர் அனைவரும் சுமந்திரனின் ஆதரவாளர்களே என்ற தோற்றத்தைத் தருவது போல யாழ் வேட்பாளர் அணியை அந்த சமூக ஊடகத்தில் ஒருவர் 'சிறிதரனும் பரமார்த்த குருவும் ஏழு சீடர்களும்' என்று குறிப்பிட்டு இருந்தார்.

அது உண்மை என்றால், சிறிதரன் தவிர மற்ற எண்மரும் ஓரணி என்பதுதான் நிலைமை.

இந்த அணிகட்டல் தமிழரசுக் கட்சியின் வெற்றி வாய்ப்புக்கு எவ்வளவு தூரம் சாதகமானது என்பதை நவம்பர் 15ஆம் தேதிதான் பார்க்கக் கூடியதாக இருக்கும்.

புதியவர்களுக்கு இடம் என்றார்கள். இளைஞர்களுக்கு முன்னுரிமை என்றார்கள். ஆனால் வடக்கில் கடைசியாக அறிவிக்கப்பட்ட நான்கு தேர்தல்களிலும் தவறாது வேட்பாளர்களாக நிறுத்தப்பட்ட ஆர்னோல்ட் இப்போது ஐந்தாவது தேர்தலிலும் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

முதலில் மாகாண சபை தேர்தல். அடுத்து யாழ் மாநகர சபைத் தேர்தல், அதன்பின்னர் நாடாளுமன்றத் தேர்தல், தொடர்ந்து மீண்டும் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி தேர்தல், அதனை அடுத்து இப்போது நாடாளுமன்றத் தேர்தல் என அடுத்தடுத்து வந்த ஐந்து தேர்தல்கள் அனைத்திலும் ஒரே நபரை வேட்பாளராக நிறுத்திவிட்டு, புதியவர்களுக்கு வாய்ப்பளிக்கிறோம் என்று கயிறு விடுகிறது தமிழரசு.

ஆழமாக இறங்கி பல விடயங்களை பிய்த்து உதறுவது கட்டாயமானது என்று தோன்றினாலும், மாவை சேனாதிராஜா போன்ற லாயக்கற்ற ஒருவரை தலைவராக வைத்திருக்கும் போது, இப்படிக் கட்சி இழுத்த பக்கமெல்லாம் இழுபடும் என்ற இயலாமையைப் புரிந்து கொண்டு விமர்சனத்தை குறைத்துக் கொள்கிறேன்.

ஆனால் பொது மக்களின் கருத்து நிலைப்பாடு கட்சியின் நலனுக்கு உகந்ததாக இல்லை என்பதை மட்டும் குறிப்பிடுகிறேன்.

---

## சுமந்திரனுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

சி.சிறீதரன் வெளியேறிச் சென்ற சம்பவம் நேற்று இடம்பெற்றது.

வவுனியா, இரண்டாம் குறுக்குத்தெருவில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் தெரிவுக் குழுவின் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் பின் ஊடக சந்திப்பும் நடைபெற்றது.

அந்த ஊடக சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் அமர்ந்து கொண்டு குறித்த சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனையும் அழைத்தார். ஆனால், அவர் வரவில்லை.

இதன்போது, கட்சியின் பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம் சிறீதரனை அழைத்திருந்தார். அவர் ஊடக சந்திப்பில் கலந்துகொள்ள மறுப்பு தெரிவித்ததையடுத்து, கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் மற்றும் ரஞ்சினி ஆகியோர் சிறீதரனைக் கையால் பிடித்து இழுத்து அமருமாறு கோரிய போதும் அவர் அதை ஏற்காது அங்கிருந்து வெளியேறிச் சென்றார்.

இதையடுத்து, எம்.ஏ.சுமந்திரன், "சரி விடுங்கோ..." எனக் கூறிவிட்டு பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கத்துடன் இணைந்து ஊடக சந்திப்பை நடத்தினார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்ட தேர்தல் தொகுதியில் சி.சிறீதரன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இருவரும் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## சார்ள்ஸ் இம்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிட எமது கட்சியிடம் விண்ணப்பிக்கவில்லை."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் வேட்பாளர் தெரிவுக் குழு உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, "வன்னி மாவட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் இம்முறை போட்டியிடவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. உண்மையில் அவர் போட்டியிடுகின்றாரா?" – என்று என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன், "முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தான் இம்முறை போட்டியிடவில்லை எனத் தெரிவித்திருந்தார். தற்போது அவர் போட்டியிடுகின்றார் எனச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன என்று கூறுகின்றீர்கள். அவ்வாறு எமக்குத் தெரியாது. அவர் போட்டியிட இம்முறை விண்ணப்பிக்கவில்லை." – என்றார்.

---

## தமிழரசுக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அறிக்கை ஒன்றின் மூலம் அவர் இதனை அறிவித்துள்ளார்.

குறிப்பாக தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் நியமனத்துக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தபோது அதில் யாழ்ப்பாணம்–கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தினுடைய மற்றும் கொழும்பு வாழ் மக்களினுடைய கோரிக்கைக்கு அமைவாக தான் விண்ணப்பத்தை கொடுத்திருந்ததாகவும், அதனை எந்தவொரு காரணமும் இல்லாமல் சுமந்திரன் நிராகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சுமந்திரன் தான் சார்ந்த அணியை வேட்பாளர் பட்டியலில் தெரிவு செய்து கட்சிக்காகத் தொடர்ச்சியாகப் பாடுபடுகின்ற மிக முக்கியமான திறமைசாலிகளை உள்ளெடுக்காததன் அடிப்படையிலும் தான் நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்த மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல முடியாத ஒரு கட்டத்தால் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"தான்தோன்றித்தனமாகத் தமிழரசுக் கட்சியின் தேர்தலில் தோல்வியுற்ற பின்னரும் கட்சியைப் பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கத்தின் ஊடாக முழுச் செயற்பாடுகளையும் நிர்வகித்து வரும் சுமந்திரன் கட்சியை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதை அனுமதிக்க முடியாது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி வரலாற்றில் பல தியாகங்களாலும், வீரம் செறிந்த பல போராட்ட சரித்திரங்களாலும் 2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ்த் தேசியத் தலைவரின் உயர்ந்த சிந்தனையின் அடிப்படையில் வீடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக உருவாக்கப்பட்டது.

அந்த வீட்டில் இருந்த அனைவரையும் வெளியேற்றி, தமிழரசுக் கட்சிகளின் தூண்களையும் வெளியேற்றி, மேலும் தென்னிலங்கையின் முகவர் அரசியல் செய்வதற்கு முற்படுகின்ற சுமந்திரனின் தான்தோன்றித்தனமான செயற்பாடு ஒட்டுமொத்த தமிழரசுக் கட்சியையும் அழிக்கும்.

எனவே, என்னை நேசிக்கும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம், வடக்கு – கிழக்கு மக்களுக்கு நான் அறியத் தருவது என்னவென்று சொன்னால் வீரத்தின் பால் வழிநடத்தப்பட்ட கட்சி இன்று சோர்விழந்து சோரம் போகின்ற ஓர் ஆபத்தான நிலையில் இருக்கின்றபடியால் அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் நான் விலகுகின்றேன்.

தமிழ்த் தேசிய விரோதிகளின் கைகளுக்குள் சிக்குண்ட தமிழரசுக் கட்சியில் தொடர்ந்தும் பயணிப்பது பொருத்தமற்றது என்பதால் இந்த முடிவு எட்டப்படுகின்றது.

தனிநபர்களின் தன்னிச்சையான போக்குக்குள் சிக்குண்டு தமிழரசுக் கட்சி சின்னாபின்னமாகி இருக்கின்ற நிலையில் தொடர்ந்தும் தமிழரசுக் கட்சியில் பயணிக்க முடியாது

தேசியத்தைக் கண்முன்னாலே குழிதோண்டிப் புதைக்கின்ற செயற்பாடுகளுக்குத் துணை போகின்ற வரலாற்றுத் துரோகத்தை நான் செய்யத் தயார் இல்லை என்பதால் தமிழரசு கட்சியில் இருந்து விலகிக்கொள்கின்றேன்.

தமிழ்த் தேசியத்தை உரிய பலத்துடன் நிலைநாட்ட என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வதற்குண்டான வழிவகைகள் குறித்து எதிர்காலத்தில் சிந்திப்பதற்கு முடிவெடுத்துள்ளேன்." – என்றுள்ளது.




# கைத்தொழில் துறையின் ஏற்றுமதியை 20 வீதம் அதிகரிப்பதற்கு நடவடிக்கை

## கைத்தொழில் அமைச்சு அறிவிப்பு

இந்த வருடம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழில் துறையின் ஏற்றுமதியை 20 வீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

கிராமிய உற்பத்தியாளர் படையணியை 7 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

கைத்தொழில் துறையில் இணையும் இளம் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவிருப்பதுடன் நவீன தொழில்நுட்பம் குறித்து அவர்களுக்கு தெளிவூட்டல்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

# அளுத்கமவில் வர்த்தகரும் அவரது மனைவியும் கொலை

வெலிபன்ன - அளுத்கம பகுதியில் வர்த்தகர் ஒருவரும் அவரது மனைவியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இருவரும் அவர்களது வீட்டுக்குள் முகத்தைத் துணியால் கட்டப்பட்ட நிலையில், கொலை செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, 75 வயதான வர்த்தகரும், 67 வயதான அவரது மனைவியும் கொலை செய்யப்பட்டுள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், அவர்களது சடலங்கள் வீட்டிலிருந்து நேற்று மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்த வர்த்தகர் தம்பதியினருக்குப் பிள்ளைகள் இல்லை எனவும், இருவர் மாத்திரம் வீட்டில் தங்கியிருந்தனர் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.



# மின்னல் தொடர்பில் அவதானம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்




எதிர்வரும் 24 மணித்தியாலங்களில் மின்னல் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இரவு வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

இந்தச் சந்தர்ப்பங்களில், மின்னல் தாக்கம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.



# 56 பாகிஸ்தான் கைதிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்

இலங்கையில் சிறைவைக்கப்பட்டிருந்த 56 பாகிஸ்தான் கைதிகள் நேற்று அந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்

கைதிகள்பரிமாற்றஉடன்படிக்கைக்குஅமையமேற்படிகைதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டின் அடிப்படையில் சிறை தண்டனை அனுபவித்துவந்த பாகிஸ்தான் கைதிகளே இவ்வாறு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளிடம் மேற்படி கைதிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அநுராதபுரம்- மஹவ ரயில் மார்க்கத்தின் திருத்தப்பணிகளில் தாமதம் ஏற்பட்டது




வடக்கு ரயில் மார்க்கத்தின் அநுராதபுரம் முதல் மஹவ வரையிலான ரயில் மார்க்கத்தின் திருத்தப்பணிகள் மேலும் தாமதமாகும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் முதல் மஹவ வரையிலான ரயில் மார்க்கத்தின் சமிஞ்ஞை கட்டமைப்பு நடவடிக்கைகள் இதுவரையில் நிறைவு செய்யப்படவில்லை.

ஆகையால், அநுராதபுரம் முதல் மஹவ வரையிலான ரயில் மார்க்கத்தின் சேவையை முன்னெடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் என்.ஜே. இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## புதிய அரசின் பாய்ச்சல்!

மாறி மாறி ஆட்சிபீடம் ஏறி, நாட்டைச் சூறையாடிக் கொண்டிருந்த மூன்றாம் தர அரசியல் தலைவர்களுக்கு இப்போது இலங்கையின் அரசியல் தளத்தில் ஏற்பட்டுள்ள அதிரடி மாற்றங்கள், போக்குகள், செல்நெறிகள் மிகவும் மலைக்க வைப்பனவாக இருக்கின்றன.

அதுவும் அரசியலைப் பயன்படுத்தி குறுக்கு வழியில் பணமீட்டிக் கொண்டிருந்த அரசியல் முதலைகளுக்கு இடதுசாரிகளின் கை அரசியலில் ஓங்கியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது வெளிப்படையான உண்மை.

கடந்தகாலஆட்சிகளின்ஊழல், மோசடி, துஷ்பிரயோகங்கள், தவறான ஆட்சிப் போக்குகள் போன்றவற்றை அம்பலப்படுத்துவோம் என்ற ஒரே இலக்கை பகிரங்கமாகப் பிரசார படுத்தி, அதனையே நோக்காக கொண்டு, அதிகார பீடத்திற்கு தேசிய மக்கள் முன்னணியினர் வந்திருப்பது காலம் காலமாக நாட்டை சூறையாடிக் கொண்டிருந்த பரவணி அரசியல்வாதிகள் பலருக்கு பீதியை கிளப்பி இருக்கின்றது - வயிற்றில் புளியைக் கரைத்திருக்கின்றது - என்பது இப்போது யதார்த்தமாகும்.

தாம் காலம் காலமாக பண்ணி வந்த திருகுதாளங்களை, அரசியல் குளறுபடிகளை, புதிய ஆட்சி பீடம் கிளறும் என்பது அவர்கள் எதிர்பார்த்ததுதான்.

வழமையாக ஆட்சிகள் மாறும்போது இத்தகைய காட்சிகள் அரங்கேறுவதுண்டு. ஆனால் பொதுவாக இதுவரை காலமான ஆட்சி மாற்றங்களின் போது அவை வெறும் வாய்ப்பேச்சோடு - வாய்ச்சவாடலுடன் - அடங்கிவிடும். அதுதான் நாட்டின் அனுபவம்.

ஆயினும் இப்போது தேசிய மக்கள் சக்தி அரசு, வாய்ப்பேச்சைத் தாண்டி நேரடியாக விடயங்களுக்குள் முழுமூச்சாக இறங்கத் தொடங்கி இருக்கின்றது.

முன்னைய அரசுகளின் காலங்களில் அரசியல் அழுத்தங்களால் இடைநிறுத்தப்பட்ட முக்கிய விவகாரங்கள் பற்றிய விசாரணைகளை அவை இடைநிறுத்தப்பட்ட இடங்களில் இருந்து ஆரம்பித்து, மூலங்களை கண்டுபிடித்து, உண்மைகளை அம்பலப்படுத்த புதிய அரசு கங்கணம் கட்டி நிற்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

பழைய ஊழல் அரசியல்வாதிகளை, அதிகாரிகளை, நிர்வாகிகளை அந்தச் செயற்போக்கி குலைநடுங்க வைத்திருக்கின்றது என்பது உண்மை.

அரசியல் அழுத்தங்களால் இடைநிறுத்தப்பட்டுள்ள தாஜுதீன், லசந்த கொலை வழக்குகள், மத்திய வங்கி பிணைமுறி மோசடி, மிக் விமான கொடுக்கல் வாங்கல் மோசடி உள்ளிட்ட 7 குற்ற வழக்குகளின் புலன் விசாரணைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய மற்றும் அரசியல் அழுத்தங்களினால் இடைநிறுத்தப்பட்ட 7 குற்ற வழக்குகள் தொடர்பான விசாரணைகளை பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் உத்தரவின் பேரில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தின் போது இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை நிறைவு செய்து, சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை தரம் பாராமல் கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நல்லாட்சி ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பிலான விசாரணைகள் நிறைவடைந்துள்ள சூழலில், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ஊடகவியலாளர் எக்னெலிகொட காணாமல் போனமை மற்றும் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பில் இடைநிறுத்தப்பட்டுள்ள விசாரணைகளை மீள ஆரம்பிக்குமாறு பணிப்புரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கப்பம் பெறுவதற்காக கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் 11 பேர் காணாமல் போன சம்பவம் தொடர்பிலான விசாரணையை முடித்து வைக்க உத்தரவு கிடைத்துள்ளது.

பாரிய நிதி மோசடி என அறியப்படும் மிக் விமான கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விசாரணைகளை மீண்டும் ஆரம்பித்து சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

யுத்தக் காலகட்டத்தில் வடக்கு, கிழக்கில் தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள், அராஜகங்கள், அடாவடித்தனங்கள் உட்பட தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அனைத்து யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்தும் இதே நேர்மைத் திறத்துடன் உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்பு கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் இந்த அரசின் நடவடிக்கைகள் நேர்மையானவையாகக் கருதப்படும்.





# ராமர் வேடத்தில் நடித்தவர் மேடையிலேயே உயிரிழப்பு

நவராத்திரி விழாவை முன்னிட்டு டில்லியில் நடந்த ராம் லீலா நாடக நிகழ்ச்சியில் ராமர் வேடத்தில் நடித்தவர் மேடையிலேயே உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் 45 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை டில்லி பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

## சென்னை விமான சாகச நிகழ்ச்சி:

# தமிழக அரசு, ரயில்வே துறை மீது பொதுமக்கள் கடும் குற்றச்சாட்டு



விமான வான் சாகச நிகழ்ச்சியை கண்டுகளிக்க சென்னை மெரினா கடற்கரை நோக்கி மக்கள் படையெடுத்ததால், மின்சார, மெட்ரோ ரயில்களில் கட்டுக்கடங்காத கூட்டம் நேற்று நிரம்பி வழிந்தது.

சென்னையின் பல்வேறு சாலைகளிலும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. தமிழக அரசும், ரயில்வே துறையும் போதிய முன்னேற்பாடுகளை மேற்கொள்ளாததே இதற்குக் காரணம் என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்திய விமானப்படை 93 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இதைக்கொண்டாடும் வகையில், மிகப்பெரிய விமான வான் சாகச நிகழ்ச்சி சென்னை மெரினா கடற்கரையில் நேற்று காலை 11 மணி முதல் ஒரு மணி வரை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை சாதனை நிகழ்வாக மாற்ற பொதுமக்கள் அதிக அளவில் கலந்துகொண்டு கண்டுகளிக்க வேண்டும் என விமானப்படை அழைப்பு விடுத்தது. 15 லட்சம் பேர் வரை பங்கேற்பார்கள் என்றும் எதிர்பார்ப்பு தெரிவித்திருந்தது.

அதன்படி, சென்னை மற்றும் அண்டை மாவட்டங்களான திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்தும் ரயில், மெட்ரோ ரயில், பஸ் மூலமாக நேற்று காலை 7 மணி முதல் சென்னை மெரினா கடற்கரை நோக்கி மக்கள் செல்லத் தொடங்கினர். அதிலும், சென்னை மற்றும் புறநகரில் இருந்து மின்சார ரயில்களில் சென்னை கடற்கரைக்கு வந்த மக்கள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது.

குறிப்பாக, செங்கல்பட்டு – சென்னை கடற்கரை மற்றும் வேளச்சேரி – சிந்தாதிரிப்பேட்டை நோக்கி இயக்கப்பட்ட மின்சார ரயில்களில் கட்டுக்கடங்காத கூட்டம் நிரம்பி வழிந்தது.

செங்கல்பட்டு, தாம்பரம், கிண்டி, நுங்கம்பாக்கம், எழும்பூர், பூங்கா, சிந்தாதிரிபேட்டை, திருமயிலை, வேளச்சேரி உள்ளிட்ட முக்கிய ரயில் நிலையங்களில் நேற்று காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மக்கள் கூட்டம் அலைமோதியது. அரைமணி நேரத்துக்கு ஒருமுறை இயக்கப்பட்ட மின்சார ரயில்களில் ஏறமுடியாத அளவுக்கு கூட்டம் நிரம்பிவழிந்தது. இதனால், பெரும்பாலான மக்கள் வான்சாகச நிகழ்ச்சியை பார்க்கும் எண்ணத்தை கைவிட்டு, வீட்டுக்கு திரும்பினர்.

மின்சார ரயிலைப்போல், மெட்ரோவிலும் குறிப்பாக சென்னை விமான நிலையம் – விம்கோ நகர், பரங்கி மலை – சென்ட்ரல் ஆகிய இரு வழித்தடங்களில் இயக்கப்பட்ட மெட்ரோ ரயில்களில் நேற்று காலை முதலே கூட்டம் நிரம்பி வழிந்தது.

ரயில் மற்றும் சாலை போக்குவரத்து நெருக்கடிகளைத் தாண்டி மெரினா கடற்கரைக்குச் சென்று விமானப் படையின் சாகச நிகழ்ச்சியை கண்டுகளித்தவர்களுக்கு மீண்டும் வீடு திரும்புவது பெரும் சாதனையாக இருந்தது.

மாலை வரை மின்சார ரயில், மெட்ரோ ரயில்களில் இந்த கூட்ட நெரிசல் நீடித்தது. விமான சாகச நிகழ்ச்சி நடைபெறும் போது, கண்டுகளிக்க லட்சக்கணக்கான மக்கள் வருவார்கள் என்று அறிந்தும், தமிழக அரசும், ரயில்வே துறையும் இணைந்து ஆலோசித்து, போதிய மின்சார ரயில்கள் இயக்க ஏற்பாடு செய்யவில்லை என்று பயணிகள் குற்றச்சாட்டினர்.







# தெற்கு லெபனானிலிருந்து மக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவு

தெற்கு லெபனானில் இருந்து பொதுமக்களை வெளியேறுமாறு இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.

லெபனான் மீது இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல் மேற்கொண்டு வரும் நிலையில், இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, லெபனானின் தலைநகர் பெய்ரூட் மீது இஸ்ரேல் நேற்று முன்தினமும் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 23 பேர் கொல்லப்பட்டுள்ள நிலையில், 100 பேர் காயமடைந்துள்ளனர் என லெபனான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனிடையே, லெபனான் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவது மேலும் தாமதமடையுமென அந்த நாட்டு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

லெபனானில் நிலவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதன்படி பாடசாலைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்படலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தனியார் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் நிலைமைகளை கருத்திற் கொண்டு இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் எனவும் லெபனான் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.









# இஸ்ரேலின் தாக்குதலில் 21 பாலஸ்தீனியர்கள் பலி

இஸ்ரேல், மத்திய காசா பகுதியில் முன்னெடுத்த தாக்குதலில் 21 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதற்கமைய காசாவின் வடக்கு பகுதியில் உள்ள பொது மக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் இஸ்ரேல் உத்தரவிட்டுள்ளது.



# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா உதவுமென மாலைத்தீவு நம்பிக்கை



மாலைத்தீவு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா உதவுமென தாம் நம்புவதாக மாலைத்தீவு ஜனாதிபதி மொஹமட் முய்ஸு தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கு ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள மொஹமட் முய்ஸு, நூறு மில்லியன் ரூபா அமெரிக்க டொலர் மதிப்பிலான பிணை எடுப்பை இந்தியாவிடமிருந்து பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாலைத்தீவின் அந்நியச் செலாவணி கையிருப்பு 440 மில்லியன் அமெரிக்க டொலராக குறைந்துள்ளது.

மேற்படி நிதியானது ஒன்றரை மாதத்திற்கான இறக்குமதிக்கு மாத்திரம் போதுமானதாக இருக்குமெனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# இன்றைய ராசி பலன்கள் -07.10.2024


மேஷம்

இன்று குறைந்த செயலாற்றலுடன் காணப்படுவீர்கள். ஆன்மீக ஈடுபாடு மற்றும் பிரார்த்தனை மேற்கொள்வது நல்லது. தியானமும் மேற்கொள்ளலாம். பிறருடன் உரையாடும் போது கவனமாக உரையாடுங்கள்.

பணியில் உங்கள் பொறுப்புகளை சிறிது பதட்டத்துடன் கையாள்வீர்கள். இதற்கு எதிர்காலம் பற்றிய உங்கள் தேவையற்ற பயமே காரணம். அமைதியாக உற்சாகத்துடன் பணியாற்றுங்கள்.

கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் ஈகோ பிரச்சினை ஏற்படும். அதனை தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். மேலும் உங்கள் சம்பாத்தியத்தை குடும்பத்தில் ஏற்படும் பொறுப்புகளுக்காக செலவு செய்ய நேரும்.

இன்று உங்களுக்கு தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. சளி மற்றும் இருமல் ஏற்படவும் வாய்ப்புள்ளது.


ரிஷபம்

உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது அவசியம்.பிரார்த்தனை மற்றும் பக்திப் பாடல்கள் கேட்பது உங்களுக்கு ஆறுதல் தரும்.

நீங்கள் குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகள் நிலுவையில் இருக்கும். அது உங்களுக்கு கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடமிருந்து வரும் வதந்திகளை நம்ப வேண்டாம்.

உங்கள் துணையுடன் நல்ல தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள், நீங்கள் இருவரும் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் உறவு மேம்படும்.

இன்று பணம் சம்பாதிக்க சாதகமான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். நீங்கள் பல் வலியால் அவதிப்பட நேரலாம்.


மிதுனம்

இன்று அமைதியாக இருக்க வேண்டும். நீங்கள் பதட்டப்படும்படியான சூழ்நிலைகள் உருவாகும். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம். உங்களுக்கு பிரியமானவர்களுடன் உரையாடும் போது பதட்டபடாமல் கவனமாக பேசுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். அதனால் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று உணர்ச்சிவசப்பட நேரலாம். இதனை தவிர்க்க வேண்டும். உங்கள் பிரியமானவருடன் நட்பாகவும், சகஜமாகவும் பழக வேண்டும்.

அதிக பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது. பணத் தட்டுப்பாடு காரணமாக பணம் கடன் வாங்க நேரும்.

உங்கள் ஆரோக்கியத்தின் மீது கவனம் செலுத்துங்கள். ஒவ்வாமை காரணமாக சளி ஏற்படலாம்.


கடகம்

இன்றைய நாள் சாதகமாக இருக்காது. இன்று யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. உங்களது பலவீனங்களை பலங்களாக மாற்ற முயற்சி செய்யுங்கள்.

பணிகளில் தவறுகள் நேரலாம். எனவே பணிகளை கவனமாக கையாள வேண்டும்.

உங்கள் மன நிலையில் காணப்படும் மாற்பாடு காரணமாக உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். உங்கள் துணையை மகிழ்விக்க முகத்தில் புன்னகையை கொண்டிருங்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படுகின்றது.எனவே இருக்கும் பணத்தைக் கொண்டு நிர்வகிக்க உங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று மன அழுத்தத்தின் காரணமாக முதுகு வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.


சிம்மம்

இன்றைய நாளை உங்களுக்கு சாதமாக்கிக் கொள்ள பொறுமை தேவை. இன்று அசௌகரியங்கள் காணப்படும். இன்று திட்டங்களை தீட்டி அதனை நம்பி செயலாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் வேலையை உங்கள் மேலதிகாரிகள் மதிப்பிடுவதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் செயல்திறன் சிறப்பாக இருக்கும். உங்களிடம் படைப்பாற்றல் காணப்படும்.

உங்கள் உள்ளத்து ஏமாற்றங்களை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அது உங்களுக்கு கவலையை அளிக்கும். எனவே பணத்தை கவனமான முறையில் செலவு செய்ய வேண்டும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.


கன்னி

இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இன்றைய நாளை சிறப்பாக பயன்படுத்துவீர்கள், புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள். இதனால் நிலைமை உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

சிறிய கடன் பெறுவதன் மூலம் உங்கள் பணத் தேவைகளை நீங்கள் பூர்த்தி செய்துகொள்வீர்கள். இருக்கும் பணத்தை குடும்பத்திற்காக செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படுகின்றது.


துலாம்

உங்கள் திட்டங்கள் மற்றும் அணுகுமுறை மூலம் இன்றைய நாளால் அற்புதமான நாளாக ஆக்குவீர்கள். உங்கள் உரையாடல் திறனை மேம்படுத்தி நன்மை பெறுவீர்கள்.

பணியில் சில தடுமாற்றங்கள் காணப்படும். பணிச் சுமை அதிகமாக காணப்படும். அதிர்ஷ்டத்தை சார்ந்திருப்பதை விட கடின உழைப்பை நம்புங்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவையான அணுகுமுறை கொள்வீர்கள், இதனால் அன்பு மேலும் வளரும்.

நிதி வளர்ச்சி அபாரமாக இருக்கும். சிறய அளவில் கடன் பெறுவதன் மூலம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வீர்கள்.

மன உளைச்சல் காரணமாக முதுகுவலிப் பிரச்சினைகள் ஏற்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


விருச்சிகம்

பல தடைகளுக்கு பிறகு வெற்றியைக் காண்பீர்கள். கவலைகளை நீக்கி மனதை அமைதியாக வைத்திருங்கள்.

இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்ற வேண்டும். பணியில் மும்மரமாக காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மை உணர்வு கொள்வீர்கள். இது மகிழ்ச்சியைக் குறைக்கும். உங்கள் வேறுபாடுகளைக் களைய முயலுங்கள்.

இன்று பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

அதிக மன உளைச்சல் காரணமாக கால்களில் வலி காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -07.10.2024




அதிர்ஷ்டக் குறைவு காரணமாக கடைசி நிமிடத்தில் சிறந்த வாய்ப்புகளை இழப்பீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகளைக் கையாளும் போது ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுவீர்கள். சக பணியாளர்கள் ஆதரவு கிட்டாது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையுடனான உறவில் வெளிப்படும். உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை தேவை.

இன்றுஅதிகசெலவுகள்காணப்படும்.உங்கள்பொறுப்புகள் இன்று அதிகமாக காணப்படும். உங்களிடம் உள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பொறுப்புகளை நிறைவேற்ற இயலாது.

வலிமை மற்றும் ஆற்றல் காரணமாக சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். இன்று அனுசரணையுடன் காணப்படுவீர்கள்.




இன்று சிறப்பான நாளாக இருக்கும். தைரியமும் உறுதியும் காணப்படும். உங்களிடம் சிறந்த ஆற்றல் மற்றும் திருப்தி காணப்படும்.

உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். இன்று உங்கள் பணியாற்றும் முறை சிறப்பாக இருப்பதன் காரணமாக சாதகமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் மிகவும் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே மகிழ்ச்சி அதிகரிக்கும்.

இன்று அதிக அளவு பணம் காணப்படும். தேவையான சமயத்தின் போது உங்களிடம் பணம் இருக்கும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

பெரிய அளவிலான ஆரோக்கியக் குறைபாடுகள் காணப்படாது. ஆனால் சிறிது சோர்வுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் கடின உழைப்பின் மூலம் உங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக் கொள்வீர்கள். உங்களுக்கு பிரியமானவர்களை அழைத்து உங்கள் வீட்டில் விருந்து கொடுப்பீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை தரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை பொறுமையாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று கடன் வகையில் பண வரவு காணப்படும். பண இழப்பு ஏற்படாமல் இருக்க பணத்தை சேமிக்கவும்.

இன்று தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று பொறுமையுடன் இருக்க வேண்டிய நாள். சூடான விவாதத்தை தடுக்க உரையாடுவதற்கு முன் ஒன்றிக்கு இரண்டு முறை நன்கு யோசிக்கவும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்த நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். மிகுந்த உற்சாகத்துடன் பணிகளை முடிப்பீர்கள்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இதனைத் தவிர்க்க வேண்டும். நட்பான அணுகுமுறை வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் உள்ளது. அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக நீங்கள் பணத்தை இழக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். யோகா மேற்கொள்வது நல்ல பலனைத் தரும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAWAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPM (AUS), FMAAT (SL), HCS



CENTRAL PARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539



Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park